# சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

## Singapore Tamil Teachers' Union

10 Jalan Besar, #13-08/09 Sim Lim Tower, Singapore 208787

Tel: 65 62935644 Fax: 65 62939824 Email: admin@sttu.org.sg


15 மே, 2020

தமிழாசிரிய நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்,

2020-ஆம் ஆண்டு பற்பல சோதனைகளோடு தொடங்கியுள்ளது. கோவிட்-19 கிருமிப்பரவல் உலகத்திற்கு மிகுந்த அச்சத்தையும் நெருக்கடியையும் கொடுத்திருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். இச்சோதனையை உலகம் எதிர்கொண்டு போராடிக்கொண்டிருக்கும் வேளையில் ஆசிரியர்களான நாம் நம் பணியைச் செவ்வன செய்துவருகிறோம் என்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

கடந்த இரண்டு மாதங்களாக வீட்டிலிருந்தே நாம் பணியாற்றவேண்டிய சூழல் வந்தபோதும், சிறிதும் தளர்ந்துவிடாமல் கற்றல் கற்பித்தல் பணிகளைச் வெற்றிகரமாகச் செயற்படுத்தி-வந்துள்ளோம். புதிய உத்திகளையும் தொழில்துட்ப வளங்களையும் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை வளமிக்கதாக்கி மேன்மை கண்டுள்ளோம். எவ்வித சோதனைகளையும் கடந்து நம்மால் செயலாற்ற முடியும் என்று நிரூப்பித்துக் காட்டியுள்ளோம். புதியன சாதித்துள்ளோம். அவ்வகையில் உங்களோடு சங்கம் இணைந்து செயலாற்றி வந்துள்ளது; தொடர்ந்து பணியாற்றிவரும். வீட்டிலிருந்து கற்கும் சூழலை வெற்றிகரமாக எதிர்கொண்டு சிறப்பாகக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டும் நன்றியும்.

நாம் இக்கட்டான சூழலை முழுமையாக கடந்துவிடவில்லை. வழக்கமான சூழல் திரும்பச் சிலகாலம் பிடிக்கும். மாறுதல்களுக்கேற்ப நம்மை மாற்றிக்கொண்டு செயலாற்றவேண்டிய சூழல் தொடரலாம். சங்கம் உங்களோடு தொடந்து பயணிக்கும். உங்களுக்கான உதவிகளைத் தொடந்து முனைப்போடு செயற்படுத்தும் என்னும் உறுதியினை வழங்குகின்றோம்.

இந்த ஆண்டிடை விடுமுறை சற்று ஓய்வெடுப்பதற்கான வாய்ப்பாக நமக்கு அமைந்துள்ளது. வழக்கம்போல் நாம் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கோ, நம் சொந்த பந்தங்களைக் காண்பதற்காக வெளிநாடு செல்வதற்கோ இவ்விடுமுறைக் காலம் இடங்கொடுக்காமல் போகலாம். மனந்தளராமல் விடுமுறைக் காலத்தை நல்லமுறையில் பயன்படுத்திக்-கொள்ளுங்கள்.

இக்கட்டான இச்சூழலில் உங்களுக்கு ஏதேனும் உதவியோ ஆலோசனையோ தேவை-யென்றால் தயங்காமல் மின்னஞ்சல் வழியாக (gen_sec@sttu.org.sg **or** admin@sttu.org.sg) எங்களை அணுகவும்.

இது நமது சங்கம். உறுப்பினர் நலனே சங்கத்தின் நலன். இந்த இக்கட்டான சூழலை ஒன்றிணைந்து எதிர்கொண்டு வெற்றிபெறுவோம்.

என்றும் உங்களுடன்,

***தலைவர் & செயலவை***

*உங்கள்* STTU